


**29.01.2025**

<u>தலைப்புச்செய்திகள்</u>

1. முப்படைகள் பாசறை திரும்பும் நிகழ்வில் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று பங்கேற்கிறார்.

2. நாட்டில் வரும் 5 ஆண்டுகளில் மேலும் 100 செயற்கைகோள்களை விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளதாக அதன் தலைவர் டாக்டர் வி.நாராயணன் கூறியுள்ளார்.

3. தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் 327 கோடி ரூபாய் செலவிலான அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

4. ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை இடைத்தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் பெயர், சின்னம் பொருத்தும் பணிகள் இன்று தொடங்கின.

5. தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு கிடாம்பி ஸ்ரீகாந்த், சுப்பிரமணியன் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

*********

பாசறை திரும்பும் நிகழ்ச்சி
நாட்டின் 76-வது குடியரசு தின விழா பேரணியில் பங்கேற்ற முப்படைகள் பாசறை திரும்பும் நிகழ்வு புதுதில்லி விஜய் சௌக்கில் இன்று நடைபெறுகிறது.

இந்தாண்டு பாசறை திரும்பும் நிகழ்வில் மொத்தம் 30 இசை நிகழ்வுகளுடன் முப்படைகள் மற்றும் மத்திய ரிசர்வ் காவல் படையினரின் வாத்திய குழு அணிவகுப்பு இடம்பெறுகிறது.

கதம், கதம், படாயே ஜா நாட்டுப்பற்று பாடல் இசையுடன் தொடங்கும் அணிவகுப்பு

சாரே ஜஹாங்ஸே அச்சா பாடலுடன் நிறைவுபெறுகிறது.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு,

குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர்,

பிரதமர் திரு.நரேந்திரமோடி,

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங்

மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர்.

பாசறை திரும்பும் நிகழ்வை ஒட்டி டெல்லியில் போக்குவரத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதோடு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

*********

<u>செயற்கைகோள்</u>

ஸ்ரீஹரிகோட்டா சத்திஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து **GSLV F15** ராக்கெட் மூலம் **NVS 02** செயற்கைகோள் இன்றுகாலை மணி 6.23க்கு வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டு, புவி சுற்றுவட்டபாதையில் நிலைநிறுத்தப்பட்டது.

இதன் மூலம் இஸ்ரோவின் 100 ஆவது ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

**NVS 02** செயற்கைகோள் பயணங்களுக்கான தரை, கடல், வான்வழி பயண வழிகாட்டுதல் பாதுகாப்புதுறை செயல்பாடுகளுக்கு உதவிகரமாக இருக்கும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

ஸ்ரீஹரிகோட்டாவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரோ தலைவர் திரு.நாராயணன் வரும் 5 ஆண்டுகளில் மேலும் 100 செயற்கைகோள்களை செலுத்த திட்டமிடப்பட்டிருப்பதாக கூறினார்.

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரபட்டிணத்தில் 2ஆவது ராக்கெட் ஏவுதளம் அமைக்கும் பணிகள் இரண்டு ஆண்டுகளில் முடிவடையும் என்றார்.

ககன்யான் திட்ட முன்னேற்பாடுகள் வேகமாக நடைபெறுவதாகவும்,

**NGLV,**

சந்திரயான் 4,

சந்திரயான் 5 திட்டங்கள் தீவிரபடுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

*********

<u>அனைத்துகட்சி கூட்டம்</u>

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் வெள்ளிக்கிழமை தொடங்க உள்ள நிலையில் நாளை அனைத்து கட்சி கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இதனிடையே நாடாளுமன்ற கூட்டம் நடைபெறுவதை ஒட்டி சென்னையில் திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது.

நாடாளுமன்றத்தில் கட்சி மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறை குறித்து இதில் விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

மாநில அரசின் கோப்புகளில் ஆளுநர் கையெழுத்திட உரிய கால நிர்ணயம் செய்திட வலியுறுத்துதல் உள்ளிட்ட 6 தீர்மானங்கள் இதில் நிறைவேற்றப்பட்டன.

*********

<u>பிரயாக்ராஜ்</u>

உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் மௌனி அம்மாவாசை தினத்தை ஒட்டி மகா கும்பத்தில் 4 கோடிக்கும் மேற்பட்ட பக்தர்கள் இன்று புனித நீராடியுள்ளனர்.

50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாதுகாப்பு படையினர், காவல்துறை ஊழியர்கள், துணை ராணுவ படையினர் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

முதல்முறையாக நீருக்கு அடியே ட்ரோன் விமானங்கள் மூலம் கண்காணிப்பு பணிகளை அம்மாநில காவல்துறை மேற்கொண்டு வருகிறது.

இதனிடையே மகா கும்ப கூட்ட நெரிசலில் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு குடியரசு தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் விரைந்து குணமடைய பிரார்த்தப்பதாக கூறியுள்ளனர்.

*********

<u>பிரச்சாரம்</u>

டெல்லியில் 70 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 5ஆம் தேதி நடைபெறும் தேர்தலுக்கான அரசியல் கட்சி தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு.நரேந்திரமோடி ஷாஹ்தாரா சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட கர்த்தார் நகரில் இன்று வாக்குகள் சேகரிக்கிறார்.

ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு.அர்விந்த் கெஜ்ரிவால் புதுதில்லி பத்லி திமார்பூர் சட்டப்பேரவை தொகுதிகளில் இன்றுமாலை பொதுக்கூட்டங்களில் உரையாற்றுகிறார்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு.ராகுல்காந்தி பவானாவில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் வாக்கு சேகரிக்கிறார்.

காங்கிரஸ் தேர்தல் அறிக்கையும் புதுதில்லியில் இன்று வெளியிடப்படுகிறது.

*********

<u>ஒழுங்காற்றுகுழு கூட்டம்</u>

காவிரி நீர் ஒழுங்காற்று குழுவின் 111ஆவது கூட்டம் அதன் தலைவர் திரு.வினித்குப்தா தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

தமிழ்நாடு, கர்நாடகா, புதுச்சேரி, கேரளா நீர்வளத்துறை அதிகாரிகள் காணொலி மூலம் பங்கேற்கும் இக்கூட்டத்தில் அடுத்த மாதத்திற்கான காவிரி நீர் பங்கீடு குறித்து விவாதிக்கப்படுகிறது.

இதனிடையே காவிரி மேலாண்மை ஆணையத்தின் 37ஆவது கூட்டம் அதன் தலைவர் திரு.எஸ்.கே.ஹல்தர் தலைமையில் நாளை புதுதில்லியில் நடைபெறுகிறது.

முதலமைச்சர்

தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் 327 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 ஆயிரத்து 404 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

காணொலி மூலம் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நாகை மயிலாடுதுறை மாவட்டங்களில் 8 கோடியே 58 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் 2 வட்டாச்சியர் அலுவலக கட்டிடங்கள்,

ஏழரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகளையும் முதலமைச்சர் காணொலி வாயிலாக திறந்துவைத்தார்.

விருதுநகர் மாவட்டம் சூலக்கரை கிராமத்தில் 50 மெட்ரிக் டன் உற்பத்தி திறன்கொண்ட கால்நடை தீவண தொழிற்சாலை,

திருநெல்வேலி கூடுதாழை கிராமத்தில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளம், மீன் விதை பண்ணைகளையும் முதலமைச்சர் திறந்துவைத்தார்.

*********

ஈரோடு

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைக்கு வரும் 5ஆம் தேதி நடைபெற உள்ள இடைத்தேர்தலுக்காக மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் பெயர் சின்னம் பொருத்தும் பணிகள் இன்று தொடங்கின.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

*********

அமைச்சர்கள் சிறப்புமுகாம்

பெரம்பலூர் மேலபுலியூர் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் 3 ஆம் கட்ட சிறப்பு முகாமில் மாநில அமைச்சர்கள் திரு.சிவசங்கர், திரு.கணேசன், ஆகியோர் 505 பயனாளிகளுக்கு 3 கோடியே 93 லட்ச ரூபாய் மதிப்பிலான நல திட்ட உதவிகளை வழங்கினர்.

*********

அன்பில் மகேஷ்

தமிழகம் வளர்ச்சி பாதையில் சென்று கொண்டிருப்பதாக மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் பொருளாதாரம், கல்வி வளர்ச்சி, போன்ற மேம்பாடுகளுடன் மாநிலம் தொடர்ந்து முன்னேறி செல்வதாக எடுத்துரைத்தார்.

தமிழகம் அமைதியான மாநிலமாக திகழ்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

*********

தை அமாவாசை

தை அமாவாசை பக்தி சிரத்தையுடன் இன்று கடைபிடிக்கப்படுகிறது.
ராமேஸ்வரம், கன்னியாகுமரி கடல் உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு நீர்நிலைகளில் மக்கள் அதிகாலையிலேயே புனித நீராடி முன்னோர்களுக்கு நேர்த்திக்கடன் செலுத்தி வழிபட்டனர்.
ராமேஸ்வரம் அக்னிதீர்த்தத்தில் நீண்ட வரிசையில் காத்திருந்து புனித நீராடிய மக்கள் ராமநாதசுவாமி திருக்கோவிலில் வழிபாடு மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.
இதுகுறித்து எமது செய்தியாளர்
வாய்ஸ்
முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரி கடலில் பெருந்திரளான மக்கள் அதிகாலையிலேயே புனித நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் செலுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். வாய்ஸ்
நாகை வேதாரண்யம் சன்னதி கடல், கோடியக்கரை ஆதிசேது கடல் பகுதிகளிலும் அரிசி காய்கனிகள் போன்றவற்றை படைத்து, முன்னோர்களுக்கு திதி கொடுத்து மக்கள் புனித நீராடி வழிபட்டனர்.
குற்றாலம், தேனி கம்பம் சுருளி அருவி, திருச்சி ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம், ஒகேனக்கல் காவிரி ஆறு, திருவையாறு காவிரி ஆற்றங்கரை, மயிலாடுதுறை காவிரி துலாகட்ட ரிஷப தீர்த்தம் உள்ளிட்டவற்றில் ஏராளமானோர் புனித நீராடி முன்னோர்களுக்கு நேர்த்திகடன் செலுத்தி வழிபட்டனர்.

*********

இருவரி

திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சி.சி.டி.வி கேமரா மற்றும் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை மாநகர காவல் ஆணையர் திரு.ராஜேந்திரன் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

நெல்லையில் புத்தக திருவிழா வரும் வெள்ளிக்கிழமை தொடங்கி அடுத்த மாதம் 10ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

வேலூர் மாவட்டத்தின் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் சிறிய அளவிலான உழவர் சந்தைகள் அமைக்கப்படும் என்று ஆட்சித்தலைவர் திருமதி சுப்புலெட்சுமி தெரிவித்துள்ளார்.
வேலூரில் உழவர் சந்தை வெள்ளி விழா நிகழ்ச்சியில் இன்று பேசிய அவர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் நுகர்வோருக்கு கிடைத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

*********

பேட்மிண்டன்

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், சுப்பிரமணியன் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோஹன் கபூர், ருத்விகா சிவாணி இணை – தாய்லாந்து இணையை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளது.

ஹாக்கி

ரூர்கெலாவில் நடைபெறும் ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று தமிழ்நாடு – உத்திரபிரதேசத்தை எதிர்கொள்கிறது.

மற்றொரு போட்டியில் சூர்மா அணி – பெங்கால் அணியுடன் மோதுகிறது.

*********